Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி 49

மலர் ௬ யாழ்ப்பாணம் குரோதி கார்த்திகை 23 ஆம் நாள் ஷஃபான் பிறை 3 8 12-64) செவ்வாய்க்கிழமை இதழ் 299

விரைவில் வெளிவருகிறது!

ஈழநாடு
தினக்குறிப்பு
1965

‘பார்லிமெண்டைக் கலைத்து தேர்தலை நடத்துக’

எதிர்க்கட்சிகள் கோரிக்கை

ராணுவ பொலிஸ் அதிகாரிகளுக்கும் வேண்டுகோள்

கொழும்பு, திங்கள்

அரசியல் சட்டத்துக்குட்பட்ட அதிகாரத்தைப்பிரயோகித்து மேற்கொண்டு தாமதப்படுத்தாமல் பார்லிமெண்டைக் கலைத்து பொதுத் தேர்தலுக்கான திகதியை நிர்ணயிக்கவேண்டுமென பார்லிமெண்டிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர்கள் கவர்னர் ஜெனரலுக்கு அனுப்பிவைத்திருக்கும் கடிதமொன்றில் கேட்டிருக்கிறார்கள்:

பார்லிமெண்டின் 6 எதிர்க்கட்சிகளின் தலைவர்களும் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் 'பாராளுமன்றத்தின் நம்பிக்கையை இழந்துவிட்ட அரசாங்கமொன்று சட்டவிரோதமான நடவடிக்கையின் மூலம் அரசாங்கத்தைத் தொடர்ந்து நடத்தி, புதிய அரசாங்கமொன்றைத் தெரிவு செய்யும் மக்களின் உரிமையை மறுத்துவிடுமென்றுதான் மேற்படி கோரிக்கையை விடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராணுவத்தினருக்கு வேண்டுகோள்

ராணுவம், பொலிஸ், அரசாங்கசேவை போன்றவைகளிலுள்ள முக்கிய அதிகாரிகளையும், இதர உத்தியோகத்தர்களையும் தோல்வியுற்றிருக்கும் அரசாங்கம் விடுக்கும் எந்தவித சட்டவிரோத உத்தரவுகளையும் அமுல் நடத்த வேண்டாமென அறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கவர்னர்ஜெனரலுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் இன்று 7-ந் திகதியாகியும், பார்லிமெண்டைக் கலைப்பதற்கான எதுவித நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்பட்டதாகத் தமக்குத் தெரியவில்லையென எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

இக்கடிதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா, தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், எம். ஈ. பி. தலைவர் திரு. பிலிப் குணவர்த்தன, டாக்டர் தகநாயக்கா, ஜே. வி. பி. தலைவர் திரு. கே. எம். பி. ராஜரத்தின, திரு. ரொபேர்ட் குணவர்த்தன ஆகியோர் கைச்சாத்திட்டுள்ளனர். திரு. சி. பி. டி. சில்வா இதற்குத் தமது சம்மதத்தைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்க

சார்பான தொழிற்சங்கங்கள் அடையாள வேலைநிறுத்தம்?

கொழும்பு, திங்கள்

கூட்டரசாங்கம் ஒரு வாக்கினால் தோல்வியுற்றாலும் அது உண்மையில் தோல்வியல்லவென்றும், அரசாங்கம் தொடர்ந்து ஆட்சியில் இருக்க வேண்டுமென்றும் பார்லிமெண்டைக் கலைக்கக் கூடாதென்ற கோரிக்கையுடன் அடையாள வேலைநிறுத்தத்தை மேற்கொள்ள அரசாங்கத்தைச் சார்ந்த அத்தியாவசிய சேவைகளில் ஈடுபட்டுள்ள சகல தொழிற்சங்கங்களும் உத்தேசித்துள்ளன.

இதுபற்றி முடிவுசெய்வதற்காக வருகிற புதன்கிழமை காலிபேஸ்திடலில் ஒரு பெரும் கூட்டத்தை நடத்த மேற்படி தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன. கூட்டத்தில் இது பற்றி முடிவுசெய்யப்பட்டபின் வியாழக்கிழமை அடையாள வேலைநிறுத்தம் நடத்துவதெனவும் ஆலோசிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

‘தோல்வியல்ல’

கொழும்பு, திங்கள்

அரசாங்கம் நிதி சம்பந்தப்பட்ட பிரேரணையின் மீது தோல்வியுறவில்லையென்பதால் இது தோல்வியாகக் கருத முடியாதெனவும் தொடர்ந்து ஆட்சி செலுத்த அரசாங்கத்துக்கு உரிமையிருப்பதாகவும் சில அரசாங்க எம். பி.க்கள் கருத்து தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது.

பிரதமர் கலந்துகொள்ளவில்லை

கொழும்பு திங்கள்

அரசாங்கம் தோல்வியுற்றதன் பின்னர் பிரதமர் பொது வைபவங்களில் அதிகமாகக் கலந்துகொள்வதில்லையென அவதானிகள் கூறுகின்றனர்.

இன்று நாரம்பிட்டியாவில் தொழிலாளர் பயிற்சி முகாம் ஒன்றையும் மத்திய வகுப்பினருக்கான வீடமைப்புத் திட்டத்தையும் ஆரம்பித்து வைப்பதாக இருந்த பிரதமர் இந்த வைபவத்தில் கலந்துகொள்ளவில்லை, அவருக்குப் பதிலாக தொழில் சமூக சேவை வீடமைப்பு மந்திரி திரு எம். பி டி' சற்சிறிவர்த்தன கலந்துகொண்டார்.

கிரிக்கெட்

வெற்றி தோல்வி இன்றி முடிவு

சென்னை, டிச. 7

இலங்கை கிரிக்கெட் கோஷ்டிக்கும், இந்தியப் பல்கலைக்கழகக் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற விளையாட்டுப்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது. ஸ்கோர் விபரம் வருமாறு:-

இலங்கை

1-ம் இன்னிங்ஸ்: 165 ரன்கள்.

2-ம் இன்னிங்ஸ் 221 ரன்கள்.

பல்கலைக்கழகம்

1-ம் இன்னிங்ஸ் 298 ரன்கள்.

2-ம் இன்னிங்ஸ் 8 விக்கெட் நஷ்டத்திற்கு 78 ரன்கள்.

கவர்னர்ஜெனரலுடன் பிரதமர் ஆலோசனை

கொழும்பு, திங்

பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா இன்று கவர்னர்ஜெனரலைச் சந்தித்தார். அரசாங்கம் தோல்வியுற்றது சம்பந்தமாகவும், அதனால் எழுந்துள்ள நிலைமைகள் பற்றியும் அவர் கவர்னர் ஜெனரலுடன் ஆராய்ந்ததாக அறியப்படுகிறது.

இன்று அலரிமாளிகையில் பிரதமர் தமது மந்திரிகளுடன் நீண்டநேரம் ஆலோசனை நடத்தினர்.

அரசாங்கத்தின் நிலைமை பற்றியும், பொதுத்தேர்தல் சம்பந்தமாகவும் அவர் மந்திரிகளுடன் ஆலோசனைநடத்தியதாகத் தெரியவருகிறது.

பௌத்த பிக்கு போட்டியிடுவார்!

கொழும்பு, திங்கள்

பத்திரிகை மசோதாவை எதிர்த்துவரும் பௌத்த பிக்கு ஒருவர் அடுத்த பொதுத் தேர்தலில் கோட்டே தொகுதியில் போட்டியிடுவார் என அறியப்படுகிறது.

பத்திரிகைகளை அரசாங்கம் எடுப்பதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்த இப் பௌத்த பிக்கு மகாஜன எக்சத் பெரமுன சார்பில் போட்டியிடுவாரென்றும், தெரியவருகிறது.

“பத்திரிகைகளை எடுத்தபின்பே பாராளுமன்றத்தை கலைப்போம்”

பதுளையில் அரசாங்க கட்சி எம். பி. பேச்சு

பதுளை, திங்கள்

“ஏரிக்கரைப் பத்திரிகைகளை எடுத்தபின்புதான் பாராளுமன்றத்தைக் கலைப்போம்” என்று பதுளை எம். பி. திரு பி. எச். பண்டாரா (ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி) பதுளை கூட்டுறவு மொத்த விற்பனவு கிளை ஸ்தாபனத்தின் எதிரே நேற்று மாலை நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போது கூறினர்.

அரசாங்கக்கட்சி எம். பி.யான திரு. பண்டார தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:

நாங்கள் உடனடியாகப் பாராளுமன்றத்தைக் கலைக்க மாட்டோம் ஏனெனில் எங்கள் கட்சியைச் சேர்ந்த சில எம். பி.க்கள் வெளிநாடுகளில் இருக்கிறார்கள், அவர்கள் திரும்பி இலங்கைக்கு வரும் வரை காத்திருப்போம்.

அவர்கள் வந்தபின் ஏரிக்கரை பத்திரிகைகளை எடுத்துவிட்டு, அதன் பின்தான் பாராளுமன்றத்தைக் கலைப்போம் அதுவரை நாங்கள் எல்லோரும் எம். பி.யாகவே இருப்போம்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:—

பத்திரிகை மசோதாவிற்கு எதிரான பிரசாரத்திற்கு ஏரிக்கரை ஸ்தாபனம் சுமார் 40 லட்சம் ரூபா செலவுசெய்யத் திட்டமிட்டிருப்பதாக அறிகி

(6 ம் பக்கம் பார்க்க)

ராஜரத்தின வீட்டின் மீது குண்டு வீச்சு

கொழும்பு, திங்கள்

ஜாதிக விமுக்தி பெரமுனையின் தலைவர் திரு. கே. எம். பி. ராஜரத்தினவின் வீட்டுக்கு நேற்றிரவு 9-30 மணியளவில் எறிகுண்டு வீசப்பட்டது. பிட்டாகோட்டேயிலுள்ள திரு. ராஜரத்தினவின் வீட்டின் முன்புறம் குண்டு வீச்சினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த விபத்தில் எவரும் காயமடையவில்லை.

குண்டு எறியப்பட்ட நேரம் தான் வீட்டில் இருந்ததாகவும் மிகவும் அதிர்ஷ்டவசமாகத் தான் தப்பியதாகவும் வீட்டு முன்புறம் பலமாகச் சேதமடைந்ததாகவும் திரு. ராஜரத்தின தெரிவித்தார்.

பார்லிமெண்ட்

20 ம் திகதியே கூடும்?

கொழும்பு, திங்கள்

முன்னர் தெரிவித்திருந்தபடி 17 ம் திகதியன்று பார்லிமெண்ட் கூடாதெனவும் 20 ம் திகதியே கூடுமெனவும் அறியப்படுகிறது.

மணிவாக்கு

"எல்லாப் பொறுப்புகளையும் விட்டுவிட்டு என்னையே நம்பி சரணடை. துக்கப்படாதீர். எல்லாப் பாவங்களிலிருந்தும் உங்களை விடுதலைசெய்வேன்."
— ஸ்ரீபகவத்கீதை

ஈழநாடு
EELA NADU

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna.
Telegrams: 'EELA NADU' Jaffna
Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு கார்த்திகை மீ 23 உ (8-12-64)

வேற்று மொழிகளில் தமிழ் நூல்கள்

தமிழ்மொழிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் வகையில் சிறந்த தமிழ் நூல்களை வேற்று மொழியில் வெளியிட வேண்டுமென்று சென்னையில் நடைபெற்ற தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் பன்னிரண்டாவது மகாநாடு தீர்மானித்திருப்பதுடன் இதற்கான முயற்சிகளை மேற்கொள்ள ஒருகுழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. இந்த நல்ல முயற்சி பாராட்டத்தக்கதாகும்.

பதினெட்டுக்கு மேற்பட்ட மொழிகள் இந்தியாவில் வழக்கிலிருக்கின்றன. அங்கும் மொழிப்பிரச்னை இருக்கிறது. என்றாலும் பிரதேச மொழிகளின் வளர்ச்சிக்கு அங்கு இடையூறு இல்லை. தமிழ் மொழியின் சிறப்பையும் தொன்மையையும் தமிழர்கள் மட்டுமே போற்றிப் புகழ்ந்து கொண்டிருப்பதால் அதன் புகழ் பரவ வழியில்லை. தமிழின் சொல்வளமும் இலக்கியவளமும் தமிழ் மொழியைப் பேசுகின்ற மக்களின் பண்பாடு, பண்டைய வரலாறு ஆகியவைகளை வேறு மொழி பேசுகின்ற மக்களும் வேற்று நாட்டாரும் அறிய வேண்டும். அப்பொழுதுதான் தமிழ் வளரும்; தமிழரின் தனித்துவத்தையும் பிறர் அறிய முடியும். "தமிழ் எழுத்தாளர்களைப் பொறுத்தமட்டில் தமிழ் எழுத்தாளர்களுக்கும் மற்றைய உலக மொழிகளுக்கும் நெருக்கமான தொடர்பு இருக்க வேண்டும். அவ்விதம் இருந்தால் தமிழ்மொழி நன்கு வளர முடியும். இதற்கு வேற்று மொழிகளில் நாம் தேர்ச்சி பெற வேண்டியது அவசியம்" என்று தமிழ் எழுத்தாளர் சங்க மகாநாட்டை சென்னையில் தொடக்கி வைத்த திரு. கே. சந்தானம் சரியாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இலங்கையில் மூன்று மொழிகளே இருக்கின்றன. துரதிருஷ்டவசமாக இங்கு மொழிப்பிரச்னை அரசியலுடன் சிக்குண்டு பெரும் பிரச்னையாக உருவெடுத்து நல்லவைகளெல்லாவற்றுக்கும் தடையாக நிற்கிறது. இப்பிரச்னையை அரசியல்வாதிகளே தீர்த்து வைப்பார்களா என்பது சந்தேகம். இப்பிரச்னை நீடிக்க சமூக நல்லுறவும் கெடுவதாகவுள்ளது. நாட்டின் எதிர்காலத்தை அமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் எழுத்தாளர்கள் முன்வந்து சமூக நல்லுறவை பலப்படுத்தத் தங்கள் பணியைச் செய்ய எவ்வளவோ இடமுண்டு.

இங்கு சிங்களத்திலுள்ள சிறந்த நூல்களைத் தமிழிலும் தமிழிலுள்ள சிறந்த நூல்களை சிங்களத்திலும் வெளியிடுவதன்மூலம் இரு சமூகத்தினருக்கிடையிலும் நல்லுறவுகளை ஏற்படுத்த முடியும். சில வருடங்களுக்கு முன் தமிழ்மறையாம் திருக்குறளை ஒரு சிங்களப்பெண் சிங்களத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார். சாகித்திய மண்டலமும் இப்பணியை மேற்கொண்டு சிங்கள எழுத்தாளரான மார்ட்டின் விக்கிரமசிங்காவின் ஒரு நூலை தமிழில் வெளியிட்டுள்ளது. இதுபோதாது. இங்குள்ள எழுத்தாளர் சங்கங்களுக்கிடையேகூட ஒற்றுமையில்லையென்பது உண்மைதான். என்றாலும் எழுத்தாளர் சங்கங்கள், சாகித்திய மண்டலம் ஆகியவைகளை மட்டும் நம்பியிராமல், நமது மொழியிலுள்ள இலக்கியச் செல்வங்களை சிங்கள மக்களுக்கும் இதர மக்களுக்கும் அளித்து உதவ வேண்டியது தமிழ் எழுத்தாளரது மேலான கடமை. இதற்கு திரு. சந்தானம் கூறுவதுபோல் தமிழ் எழுத்தாளர்களுக்கு வேறு ஏதாவது ஒரு மொழி தெரிந்திருப்பின் அவர்கள் தங்களுக்கு மட்டுமன்றி சமூகத்துக்கும் அதிக நன்மையைச்செய்ய முடியும். அதிகமான மொழிகளைத் தெரிந்துள்ள எழுத்தாளருக்கு அதிக கிராக்கி இருப்பதைப் பார்க்கிறோம். அரசியல்வாதிகள் மொழிப் பிரச்னையை எப்போது எப்படித் தீர்த்தாலும்சரி, அதற்கிடையே தமிழ் இலக்கியங்களை மொழி பெயர்த்து வேற்றுமொழிப் பத்திரிகைகளிலும், வேற்றுமொழி இலக்கியச் செல்வங்களை தமிழ்ப் பத்திரிகைகளிலும் வெளியிட உதவும் எழுத்தாளர், சமூக நல்லுறவுக்கு மேலான சேவை செய்பவர்களாவர்.

"கவிதையின் மவுசு"

யாழ்ப்பாணம், செவ்வாய்

"ஆண்டவனை அலங்கரிக்கும் பட்டுக்குடை, மங்களகரமான வைபவங்களுக்குப் பெண்கள் அணியும் கூறைச்சேலை இவைகள் போன்றதுதான் கவிதை. பட்டுக்குடையையும், கூறைச் சேலையையும் வேறு வேறு இடங்களில் பாவிக்க முற்பட்டால் அதற்குரிய மவுசு போய்விடும். கவிதையைப் படைக்கும்போது உயர்ந்த நோக்கத்தோடு, பண்புக்குட்பட படைக்கவேண்டும்" என்று 'எழிலி'காவியத்துக்கு சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற கவிஞர் சா. வே. பஞ்சாட்சரத்தைப் பாராட்டுமுகமாக இணுவில் கிழக்கு சிவகாமகரி சனசமூகநிலையத்தில் நடைபெற்ற பாராட்டுவிழாவில் திரு. கனக செந்திநாதன் பேசுகையில் குறிப்பிட்டார்.

கவிஞர் பஞ்சாட்சரத்தின் உள்ளத்திலிருந்து உருவான எழிலி அதேபோன்ற உயர்ந்த நோக்கோடு படைக்கப்பட்ட நல்ல காவியநூல் என்றும் கூறினார்.

உடுவில் கிராமசபைத் தலைவர் திரு. முத்துலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் வித்துவான் இ. திருநாவுக்கரசு, இணுவை மாறன் ஆகியோரும் கவிஞரைப் பாராட்டிப் பேசினர். கவிஞர் பஞ்சாட்சரம் தமக்களித்த பாராட்டுக்கு நன்றி தெரிவித்தார்.

'ட்ரொலி பஸ்களுக்கு ரூ. 50,000 நஷ்டம்'

கொழும்பு, திங்கள்

கொழும்பு மாநகரசபை 'ட்ரொலி பஸ்' ஊழியர்களின் வேலை நிறுத்தம் சம்பந்தமாக அறிக்கையொன்று சமர்ப்பிக்கும்படி ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு. ஏ. பி. ஜெயசூரியா ஸ்தல ஸ்தாபன கமிஷனர் திரு. டபிள்யு. டி. வி. மகதந்திலாவை கேட்டுள்ளார்.

கொழும்பு மாநகரசபை என்ஜினியர் திரு. ஆர். கனகராயரின் அறிக்கையொன்றை மாநகரசபை கமிஷனர் திரு. பி. ஏ. ஜயசிங்கா மந்திரியிடம் சமர்ப்பித்துள்ளார். வேலை நிறுத்தம் செய்தவர்களினால் "ட்ரொலி பஸ்"களுக்கு 50,000 ரூபா சேதம் ஏற்பட்டுள்ளதெனத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் 'ட்ரொலிபஸ்' சேவை கடந்த ஒன்பது தினங்களாக நடைபெறவில்லை.

"கல்விசேவைக் கமிஷன் வேண்டும்"

கொழும்பு, திங்கள்

கடந்த வெள்ளிக் கிழமை கூடிய கல்வி இலாகா கூட்டுச் சபை, கல்விப்பகுதிக்கென கல்வி சேவைக்கமிஷனென்றை நியமிக்கும்படி அரசாங்கத்தைக் கோருவதென முடிவுசெய்துள்ளது.

வீடுகள் நிறுவுவதற்காக அரசாங்க ஊழியர்களுக்கு ஐந்து வருட சம்பள முற்பணம் கொடுக்கப்படுவதை அரசாங்க ஆசிரியர்களுக்கும் விஸ்தரிக்கப்படவேண்டுமென்றும் இச்சபை முடிவுசெய்துள்ளது.

மகா கும்பாபிஷேகம்

ஊர்காவற்றுறை, திங்கள்

புங்குடுதீவுகிழக்குவல்லனில் எழுந்தருளியிருக்கும்முறிகண்டி மாணிக்கப்பிள்ளையார் ஆலய கும்பாபிஷேகம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. பகல் நடைபெற்ற அன்னதானத்தையடுத்து இரவு அலங்கார உற்சவம் இனிது நடைபெற்றது.

21-ந் திகதி சம்பளம்

கொழும்பு, திங்கள்

டிசம்பர் மாதத்துக்குரிய சம்பளம், அரசாங்க ஊழியர்களுக்கு 21-ந்திகதி கிடைக்கும். கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத்தெரியவருகிறது.

'நாவலர் ஞாபகார்த்த முத்திரை வெளியிடுக'

யாழ்ப்பாணம், செவ்வாய்

திருவள்ளுவர், நாவலர் ஞாபகார்த்த முத்திரைகள் வெளியிட்டு உதவுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் வண்ணை நாவலர் சைவபிரகாச வித்தியாசாலையில் நடைபெற்ற வடமாநில சைவ இளைஞர் மாமன்ற கூட்டத்தில் நிறைவேறியது. இக்கூட்டத்திற்கு திரு வை. இரகுநாதமுதலியார் தலைமை வகித்தார்.

இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. திருக்கோணேஸ்வரம் பகுதியைப் புனித நகராக்குமாறு கேட்டுக்கொள்ளவேண்டும். திருக்கேதீசரத்தில் நிகழவிருக்கும் சிரமதான இயக்கத்திற்கு தொண்டர்களை அனுப்ப வேண்டும்.

துர்க்கை அம்மன் கோவில் திருப்பணி

நல்லூர், செவ்வாய்

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கை அம்மன் கோவிலில் விநாயகர் ஆலயத் திருப்பணி வேலைகளை காணி. நீர்ப்பாசன அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ம. ஸ்ரீகாந்தா அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

செய்திச் சுருக்கம்

'இலங்கைக்கு வருவதென்றால் எனக்கு பெரிதும் மகிழ்ச்சி என்மேல் இலங்கை மக்கள் கொண்டிருக்கும் அன்பை என்றும் நான் மறப்பதில்லை. என்னுடைய நல்ல நூல்கள் வெளிவரக் காரணமாயிருந்தவர்கள் அவர்களே" என்று கொச்சிக்கடை தமவடாயா சத்திரத்தில் உரையாற்றிய கவியோகி சுத்தானந்த பாரதியார் கூறினார்.

∴ ∴ ∴

இலங்கைத் தமிழரசுக் கட்சியிலிருந்தும் இலங்கைத் தொழிலாளர் கழகத்திலிருந்தும் தாம் இராஜினமாச் செய்துவிட்டதாக இலங்கைத் தொழிலாளர் கழகத் துணைத் தலைவர் திரு. கே. ஏ. ராமன் தமிழரசுக்கட்சி செயலாளருக்கு அறிவித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

∴ ∴ ∴

இம்மாதத்துக்குரிய அரசாங்க ஊழியர்களின் சம்பளங்களை 21-ம் திகதியே வழங்குவதென தீர்மானிக்கப் பட்டுள்ளது. இதுபற்றி சகல நிரந்தரக் காரியதரிசிகளும் இம்மாதம் 21-ம் திகதி சம்பளம் வழங்கப்பட வேண்டுமென்று திறைசேரி சுற்று அதிகாரி அனுப்பியுள்ள நிருபமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

∴ ∴ ∴

சேனைக் குடியிருப்பு என்னும் இடத்தைச் சேர்ந்த திரு அந்தோனிமரியான் அங்குள்ள கள்ளுத் தவறணையின் முன்னால் கத்தியால் குத்தப்பட்டு மரணமானார். இவரின் மரணம் குறித்து புத்தள பதில் நீதவான் திரு எஸ். எம். எம். காசீம் ஸ்தலத்திற்கு சென்று விசாரணை நடத்தினார். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபரை இம்மாதம் 14-ந் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

∴ ∴ ∴

"உலகிலுள்ள உயிர்கள் யாவும் இன்பத்தை நாடிச் செல்கின்றன. ஆனால் துன்பம் சேராத இன்பம் எதுவும் உலகில் இல்லை. எனவே சிரிக்கவும் பேசவும் சிந்திக்கவும் தெரியாத மனிதன் உண்மையான இன்பம் எது என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்" என்று பேராதனைப் பல்கலைக் கழக இந்து மாணவர் சங்க ஆதரவில் நடைபெற்ற கூட்டத்தில் சுவாமி பிரணவானந்த சரஸ்வதி குறிப்பிட்டார்.

∴ ∴ ∴

இன்றைய அரசாங்கம் ஜனநாயகத்தை அழித்தொழிக்க பத்திரிகைகளை எடுக்க முயற்சிக்கின்றது. மக்களின் கருத்துக்களை அறியாமல் எடுத்தால் பிபிலைத்தொகுதி வாக்காளர்கள் கறுப்புக் கொடி ஏற்றி சாவுமணி அடிப்பார்கள். இதை ஆளும் கட்சியினர் உணர்ந்து கொள்ள வேண்டுமென்று ஐக்கிய தேசியக் கட்சியின் வாலிப முன்னணி செயலாளர் திரு. எம். ஐ. ரஸ்டீன் தெரிவித்துள்ளார்.

மாணவர்களுக்கு சமய தீட்சை

ஊர்காவற்றுறை, திங்கள்

நயினாதீவு ஸ்ரீ கணேச வித்தியாசாலையில் கல்விகற்று ஐந்தாம் வகுப்பில் தேறிய மாணவர்கள் சமயதீட்சை பெற்றனர்.

அரசினர் மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலச் செல்லும் இம்மாணவர்களுக்கு பிரம்மஸ்ரீ சோ. சாம்பசிவக்குருக்கள் சமயதீட்சைக் குருவாகக் கடமையாற்றினார். நயினாதீவு வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் சமயதீட்சை நடைபெற்றது.

யாழ்ப்பாணம், செவ்.

காரைநகர் சிவன் கோவில் மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை புதுக் கட்டடத் திறப்பு விழா கார்த்திகை 24-ம் திகதி புதன்கிழமை காலை நடைபெறும்.

ஐயாறன் எழுதுவது

சென்னையில்நடைபெற்றதமிழ் எழுத்தாளர் சங்க விழாவுக்கு அழைப்பு வந்தது. இரண்டு நாடகள் நிகழ்ச்சி நிரலையும் பார்த்ததும், செல்லவேண்டுமென்று மிக ஆசை. ஆனால் இன்றைய தர்பாரில் இது நடக்கக் கூடியதா? ஆகவே அதை மறந்து விட்டேன்.

நேற்றுக்காலை சென்னை வானொலியைக் கேட்டேன். எழுத்தாளர் மகாநாட்டின் இரண்டுநாள் நிகழ்ச்சிகளையும் நன்கு தொகுத்துக் கொடுத்தார்கள். பல அறிஞர்களின் பேச்சுக்களையும் சிறிது கேட்டேன். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், குஜராத்தி முதலிய மொழிகளில் நாட்டுப் பாடல்களைப் பலரும் பாடினர். தமிழ்த்தாயின் அரவணைப்பில் பல சேய்மொழிகளும் பாடக் கேட்க மிக ருசியாக இருந்தது. கி. வா. ஜ. அவர்கள் நாட்டுப்பாடல்களின் நயங்களைப்பற்றிக் கூறினார்.

உலக மகா கவிகள் பலரும் அம்மேடையில்சேர்ந்து 'தோன்றினர்' அக்கலைஞர்களின் பிறப்புக்களைப்பற்றி பலரும் பேசியது நல்லதோர் புதிய அப்சமாகும்.

இவையெல்லாம் கேட்டதும், சென்னைக்குப்போக முடியாத குறை பெரிதும் தீர்ந்தது. வாழ்க சென்னை வானொலி, அந்த வானொலியைக் கேட்கப்படாதென்று நல்லவேளையாக இன்னும் இங்கு தடைபோடவில்லை. அந்த மட்டில் மிச்சம் தாங்க்ஸ்.

இலங்கையிலும் பல இடங்களில் தமிழ் விழாக்கள் நடக்கின்றன. சென்னை காட்டியுள்ள முன்மாதிரியை இங்கு கூடுமானவரை பின்பற்றலாமென்றே இங்கு குறிப்பிடலானேன்.

* *

இப்போது உலகத்தின் மொத்த ஜனத்தொகை என்ன தெரியுமா? ஒரு கணக்கின்படி 323 கோடியாம். வருடத்துக்கு ஆறரைக்கோடி வீதம் இந்தத் தொகை உயர்ந்து வருகிறதாம். இதே வேகத்தில் மக்கள் தொகை அதிகரித்து வந்தால், இந்த நூற்றாண்டின் கடைசியில் 700 கோடிக்கு மக்கள் தொகை உயர்ந்து விடுமென்று ஒரு செய்தியைப் பார்த்தேன்.

உலகிலே சீனத்தில்தான் அதிகமான மக்கள் உள்ளதாயும் அங்கு இப்போது ஜனத்தொகை சுமார் 69 கோடிஎன்றும், அடுத்த படியாக இந்தியாவில் 49 கோடி மக்கள் இருப்பதாயும் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

சீனத்தின் பெருமையும் பலமும், உலகிலேயே தங்கள் நாட்டில், தான் அதிகமான உழைக்கும் கைகள் இருக்கின்றன என்பதுதான். ஜனத்தொகை அதிகரிப்பதைப் பார்த்து, அதுவும் ஆசிய நாடுகளிலே மக்கள் பெருகுவதைக் கண்டு ஐரோப்பிய நாடுகள் கவலைப்படுகின்றன. உலகிலே ஆஸ்திரேலியா முதலிய பல பெரிய பகுதிகளையும் வெள்ளைக்காரர்கள் ஆக்கிரமித்துக்கொண்டு, ஆசியாக்காரர் அங்கு வரப்படாதென்று தடுத்துள்ளனர். ஆசியா மக்கள் அந்தந்த நாடுகளுக்குள்ளாகவே சிறைப்பட்டிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கின்றது இந்தத்தடை நீங்குமாயின், பெரும் ஜனத்தொகையைப் பார்த்து யாரும் கவலைப்படத் தேவையில்லை. ஆனால் இந்தத் தடை நீங்குமா? எப்போது?

* * *

முக்கணாபோற்றி முதல்வா போற்றி முருகவேள் தன்னைப் பயந்தாய் போற்றி, தக்கணா போற்றி தருமா போற்றி தத்துவனே போற்றி யென் தாதாய் போற்றி, தொகவரை வென்றிருவர் தோள்கை கூப்ப துளங்கா தெகிடராய்நின்றாய் போற்றி. எக்கண்ணுங் கண்ணிலேன் எந்தாய்போற்றி எறிகெடில வீரட்டத்தீசா போற்றி.— அப்பர் சுவாமிகள்.

“தமிழ் எழுத்தாளர்களுக்கு வேற்றுமொழித் தேர்ச்சி அவசியம்”

சென்னை எழுத்தாளர் மகாநாட்டில் திரு. சந்தானம் கருத்து

சென்னை, டிச. 7

“ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு எழுத்தாளர் பங்கு மிகவும் முக்கியமாகும். தமிழ் எழுத்தாளர்களைப் பொறுத்தமட்டில், தமிழ் எழுத்தாளர்களுக்கும் மற்றைய உலக மொழிகளுக்கும் நெருக்கமான தொடர்புகள் இருந்தால்தான் எமது மொழி நன்கு வளர முடியும். இதற்கு இந்த இலட்சியத்தை நிறைவேற்றுவதற்கு வேற்றுமொழிகளில் நாம் தேர்ச்சியடைய வேண்டியது மிகவும் அவசியமாகும்” என்று நேற்று முன்தினம் இங்கு ஆரம்பமான தமிழ் எழுத்தாளர்கள்சங்க பன்னிரண்டாவது மகாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில், விந்தியப் பிரதேச முன்னாள் கவர்னரும் புகழ்பெற்ற எழுத்தாளருமான திரு. கே. சந்தானம் கூறினார்.

தமிழ் எழுத்தாளர்கள் மகாநாடு நேற்று முன்தினம் இங்கு கோகலே மண்டபத்தில் ஆரம்பமானது. இந்த மகாநாட்டுக்கு திரு. மயிலை சீனி வேங்கடசாமி தலைமை வகித்தார்.

‘வேற்றுமொழியுடனும் ஒற்றுமை வேண்டும்

திரு கே. சந்தானம் தொடர்ந்து பேசுகையில், தமிழ் மொழிக்கும் இந்திய மொழிகளுக்குமிடையே ஒற்றுமையேற்பட வேண்டுமென்றும் தமிழ் மொழி நூல்கள் இந்தச் சங்கத்தின் ஆதரவில் வேறு மொழிகளில் வெளியிடப்பட வேண்டும் என்றும் கூறினார்.

விழாவுக்குத் தலைமைவகித்த மயிலை சீனி வெங்கடசாமி பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

எழுத்தாளர் கடமை

“நாட்டில் ஒற்றுமை, ஒருமைப்பாடு, தேசபக்தி ஆகியவற்றை ஏற்படுத்த எழுத்தாளர்கள் பாடுபட வேண்டும். எழுத்தாளர்கள் நல்ல நூல்களைப் படைப்பதையே தங்களது முழு நோக்கமாகக் கொள்ள வேண்டும். நல்ல நூல்களைப் படைப்பதன் மூலம் மட்டுமே எழுத்தாளர்கள் போற்றப்படுவார்கள்.”

பரிசுபெற்ற எழுத்தாளர்கள்

சீரிய இலக்கியங்களைப் படைத்து தமிழுக்கு ஆக்கம் தேடித் தந்துள்ள திருவாளர்கள் தமிழ்கடல் ராய சொக்கலிங்கனார், நாரண துரைக் கண்ணன் ஆகியோருக்குக் கேடயங்களும் தமிழ் இலக்கியச் செல்வங்களை வேற்றுமொழி மக்களுக்கு அறிமுகம் செய்து வைத்துள்ள திருவாளர்கள் ஜே. எம். சோமசுந்தரம், ரஷ்யாவைச் சேர்ந்த செமியோன் ருடின் ஆகியோருக்குத் பதக்கங்களும் வழங்கப்பட்டன.

“யார் எழுத்தாளர்?”

சங்கத்தின் சார்பில் தங்கப் பதக்கங்களை வழங்கிய சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி திரு. அனந்தநாராயணன் ஐ. ஸி. எஸ். எழுத்தை ஆள்பவர் எழுத்தாளரா அல்லது எழுத்தால் ஆளப்படுபவர் எழுத்தாளரா என்ற ஒரு சந்தேகம் தமக்குத் தோன்றியுள்ளதாகவும் இறுதியில் எழுத்தை ஆள முயலும் பொழுது எழுத்து நம்மை ஆள்வதும் எழுத்தால் நாம் ஆளப்படுவதும் உண்மைதான் இதுவே மனித இயல்பு என்று புரிந்து கொண்டேன் என்று கூறினர்.

“எழுத்தின் வன்மை சொல்லும் தரம் அற்றது. எழுத்தின் திறமை கொண்டு சமுகத்தில் பலவற்றைச் சாதிக்க முடியும்” என்றும் அவர் கூறினர்.

“அதிகாரம் பெருத உலக சட்டமியற்றுபவனே கவிஞன்”

“கவிஞர் என்பவர் யார் என்பதற்கு இலேசாக விளக்கம் கூறமுடியாது. அதிகாரம் பெருத உகல சட்டம் இயற்றுபவர்கள் தான் கவிஞர்கள். ஷெல்லி என்ற மகாகவியின் கருத்தைக்கொண்டே இதை நான் இங்கு கூறுகின்றேன். அதிகாரம் பெருத உலகச் சட்டத்தை இயற்றுபவர் கவிஞர். வேரிலிருந்து சமூகத்தை சிருஷ்டிப்பதும் கவிஞர்தான். இலட்சியம், திறமை ஆகியவற்றை அறிந்துகொள்ளவேண்டியது எழுத்தாளர்கள் கடமையாகும்” என்றும் அவர் குறிப்பிட்டார்.

பரிசு பெற்ற எழுத்தாளர்களை திருமதி சவுந்தரம் கைலாசம் பாராட்டினர்.

நன்றியுரை

பரிசு பெற்ற ராய சொக்கலிங்கனார்நன்றி தெரிவித்துப் பேசுகையில்; எழுந்து நின்று பேசமுடியாததால் இருந்து கொண்டே தாம் நன்றி தெரிவிப்பதாகவும் தமக்கு அளிக்கப்பட்ட கேடயம் தமக்கு தற்பாதுகாப்பாக இருக்கும் என்றும் கூறினர்.

கேடயம் பரிசு பெற்ற மற்றொரு எழுத்தாளரான துரைக்கண்ணன் பேசுகையில்; காலம் சென்ற கல்கி தமிழ் உலகுக்கு நல்லசேவை ஆற்றியுள்ளார் என்றும் தமிழுக்கு ஆற்றிய சேவைக்கு தமக்கு பரிசு கிடைக்கும் பொழுது “கல்கி”யின் ஞாபகம் தான் வருகிறதென்றும் கூறினர்,

2-ம் நாள் நிகழ்ச்சிகள்

எழுத்தாளர் சங்கத்தின் இரண்டாம் நாளான நேற்றைய நிகழ்ச்சிகளுக்கு மயிலை வெங்கடசாமி தலைமை வகித்தார். காலையில் உலக மகாகவிகள் என்ற தலைப்பில் கவியரங்கும், பிற்பகல் 4 மணிக்கு திரு கி. வ. ஜகந்நாதன் தலைமையில் நாட்டுப்பாடல்கள் இசையரங்கும் இடம்பெற்றன.

காலையில் நடைபெற்ற கவியரங்கில் குழந்தைக்கவிஞர் அழ. வள்ளியப்பா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

ஜெர்மனிய கவிஞர்கள் குறித்தும் ஷேக்ஸ்பியர் பற்றியும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

பிற்பகல் நடபெற்ற நாட்டுப் பாடல் இசையரங்குக்கு திரு கி. வா. ஜெகந்நாதன் தலைமை வகித்தார். அவர் தமது தலைமையுரையில் நாட்டுப்பாடல்களின் உற்பத்தி, அவற்றின் வடிவம் ஆகிறவை குறித்து விரிவாக விளக்கினர்.

“பாடல்களை முன்னர் எப்படி அமைத்தனர் என்று எவரும் திடமாகச்சொல் முடியாது. பாடல்களைப் பாடியவர்கள் தாங்கள் விரும்பிய மெட்டுக்கு அவற்றை ஆக்கிக் கொண்டனர். ஆதியில், எண்ணங்களை ஒலிகள் வடிவமாக அமைத்தே பாடல்களை இயற்றனர். நாட்டுப் பாடல்களை ஆதிப்பாடல் என்றும் சொல்லலாம்” என்றும் அவர் குறிப்பிட்டார்.

“மழலைச் சொல்லுக்கு இலக்கணம் கிடையாது”

மழலைச் சொல்லுக்கு இலக்கணம் கிடையாது. ஆனல், அதற்கும் இலக்கணம் உண்டு. மழலை மொழிக்கென்று எவரும் இலக்கணம் அமைக்கவில்லை. மொழியின் வடிவத்திலே அதற்கு இலக்கணம் உண்டு என்றும் திரு. ஜகந்நாதன் தெரிவித்தார்.

“நாட்டுப்பாடல்களிலே சில கட்டங்களில் உணர்ச்சி தாண்டவமாடுவதை உணரலாம். உணர்ச்சிகளுக்கு அடிமைப்படும் மனிதன, அந்த உணர்ச்சி வசத்தினால் கவி இயற்றுகின்றான்” என்றும் அவர் கூறினர்.

கலை என்பது என்ன?

அறிமுகம் செய்துவைத்து “துறைவன்” பேசுகையில்; கலை என்பது மனித இனத்தின் செயல் என்று கூறினர்.

சொல்விளையாட்டை மனிதன் கண்டுபிடித்தான். அந்தச்சொற்களை வைத்து மற்றைய மனிதனைக் கவரும் சக்தியையும் அவன் கண்டுகொண்டான். நாட்டுப் பாடல்களைப் பொறுத்தமட்டில் அது நீடித்த காலமாக சுதந்திரமாக உலாவி வருகின்றது சுதந்திரமாக பறந்துசெல்லும்கலை எதுவென்றால் அது நாட்டுப் பாடல்தான்” என்றும் துறைவன் குறிப்பிட்டார்.

மகாநாட்டின் சிறப்பு

இரண்டு நாட்களிலும் நடைபெற்ற எழுத்தாளர்கள் சங்க மகாநாடு சிறப்பு மிகுந்ததாகக் காணப்பட்டது. இந்திய எழுத்தாளர்களுடன் வேறு நாட்டு எழுத்தாளர்களும் இம் மகாநாட்டில் கலந்துகொண்டனர்.

தமிழ் மொழிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் வகையில், நல்ல தமிழ் நூல்களை வேறு மொழியில் வெளியிட வேண்டுமென்று பலர் தெரிவித்த யோசனைகளை மகாநாடு ஏற்றுக்கொண்டது. இதற்காக ஒரு கமிட்டி நிறுவப்பட்டு வருடந்தோறும் இம் மாதிரியான நூல்களை வெளியிட வேண்டும் என்றும் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. சிறந்த தமிழ் நூல்களுக்கு வருடந்தோறும் பரிசுகள் வழங்கவேண்டுமென்றும் மகாநாடு முடிவு செய்தது.

இத்தாலிய ஜனாதிபதி ராஜினாமா

ரோம், டிச. 7

இத்தாலிய ஜனாதிபதி சுகயீனம் காரணமாக தமது பதவியை ராஜினாமா செய்துவிட்டார். இம்மாதம் 16-ம் திகதி பார்லிமெண்ட் கூடும்பொழுது புதிய ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படுவார்.

உணவு நிலைமை

லக்னோ, டிச. 7

உத்தரபிரதேச முதன் மந்திரியை இந்திய உணவுமந்திரி திரு. சுப்பிரமண்யம் நேற்று இங்கு சந்தித்து உணவு நிலைமை குறித்துப் பேச்சுகள் நடத்தினர்.

ஜோன்ஸன் — குரோமிக்கோ பேச்சு

வாஷிங்டன், டிச. 7

தற்பொழுது நியுயோர்க்கிலுள்ள சோவியத் வெளிநாட்டு மந்திரி திரு. குரோமிக்கோ புதன்கிழமை ஜனாதிபதி ஜோன்ஸனை சந்தித்து பேச்சுகள் நடத்துவார்,

---

சற்பிரசாத மகாநாடு முடிவு

பம்பாய், டிச. 7

கடந்த ஒன்பது தினங்களாக இங்கு நடைபெற்ற சற்பிரசாத மகாநாடு எனப்படும் சர்வதேச கத்தோலிக்கர்கள் மகாநாடு நேற்று முடிவடைந்தது. இம்மகாநாடு இங்கு ஒன்பது தினங்கள் நடைபெற்றன. நேற்றைய இறுதி மகாநாட்டில் சுமார் 2 லட்சம் மக்கள் கலந்து கொண்டனர்.

நோபல் பரிசு

ஸ்டாக்ஹோம், டிச. 6

இவ்வருடத்தில் சமாதானத்துக்கான நோபல்பரிசு பெற்ற நீக்ரோ தலைவர் மார்ட்டின் லூதர் கிங், வியாழக்கிழமை இங்கு தமது நோபல் பரிசை பெற்றுக் கொள்வார்.

சமரச பேச்சுக்கள்

புதுடில்லி, டிச. 7

கம்போடிய தகராறு சம்பந்தமாக அமெரிக்க, கம்போடிய பிரதிநிதிகளுக்கிடையே இன்று இங்கு ஆரம்பமாகவிருந்த பேச்சுக்களை நாளைவரை ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன. அமெரிக்க பிரதிநிதிகள் கோஷ்டி இங்கு வருவதில் ஏற்படும் தாமதமே இதற்குக் காரணம்.

அறநெறிகளை மக்கள் போற்ற வேண்டும்

ராதாகிருஷ்ணன் புத்திமதி

வார்தா, டிச. 7

இங்கு நேற்று நடைபெற்ற விழாவொன்றில் இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் உரைநிகழ்த்துகையில், பொருளாதார நலன்களையும் பார்க்க அறநெறிகளை மக்கள் பெரிதும் போற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

“செல்வத்தை மக்கள் குவித்து வைப்பதால் பலன் கிடையாது. செல்வத்தை மக்களின் நலன்களுக்குப் பயன்படுத்த வேண்டும் மக்கள் காந்திஜி, வினோபாஜி போன்ற தலைவர்களைப் பின்பற்றவேண்டும். நாடு வலிமையுள்ள நாடாக மிளிர்வதற்கு அறநெறி வழிகள் பயன்படும்” என்றும் டாக்டர் ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

உணவு நிலைமைபற்றி அவர் குறிப்பிடுகையில், நாட்டின் முன்னேற்றம் மக்களின் சேவையில்தான் தங்கியுள்ளதென்றும் நமது எதிர்காலம் நட்சத்திரங்கள்போல் திடீரெனத் தோன்றாது பாடுபட்டு பலனடைய வேண்டும் என்றும் கூறினர்.

உலக ஜனத்தொகை 328 கோடி!

ஆண்டு தோறும் ஆறரை கோடியாக அதிகரிப்பு

நியூயோர்க், டிச. 7

உலகின் ஜனத்தொகை இவ்வருடம் முந்நூற்று இருபத்தெட்டுக்கோடி என்று ஜனத்தொகை மதிப்பீடு சம்பந்தமான ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை நேற்று வெளியிடப்பட்டது.

ஆண்டுதோறும் உலக மக்களின் தொகை ஆறரைக் கோடியாக அதிகரித்துவருகிறதென்றும் இந்த நூற்றாண்டு முடிவில் மக்கள் ஜனத்தொகை எழுநூறு கோடியாக அதிகரிக்குமென்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

உலக ஜனத்தொகையில் சீனு முதலிடமும் இந்தியா இரண்டாம் இடமும் வகிக்கின்றன. சீனவின் மக்கள் ஜனத்தொகை 69 கோடியாகும். இந்தியாவின் ஜனத்தொகை 49 கோடியாகும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென் வியட்னும்

கடும் தாக்குதலில் 140 வியட்காங் பலி

சைகோன், டிச 7

சைகோனுக்கு தென்மேற்கே 140 மைல் தூரத்தில் நேற்று ஏற்பட்ட பெரும் தாக்குதலில் 140 வியட்காங் கொரில்லாக்கள் மாண்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் தென் வியட்னும் அரசாங்க துருப்புகள் 24 பேர் மாண்டனர் என்றும் 65 பேர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. காயமடைந்தவர்களில் 6 பேர் அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்தவர்கள்.

முன் மாதிரி

வத்திக்கான் நகர், டிச. 7

வத்திக்கான் நகரிலுள்ள சென். பீட்டர்ஸ் சதுக்கத்தில் பரிசுத்த பாப்பரசர் நேற்று உரைநிகழ்த்துகையில்; இந்தியாவுடன் நெருங்கி உறவாட தமக்கு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு பெருமகிழ்ச்சியடைவதாகவும் இந்தியர்களின் சமயப்பற்று, அடக்கம், சகிப்புத்தன்மை, [illegible] ஆகியவற்றைஉங்களிடம்சமர்ப்பிக்கிறேன் என்று கூறினர்.

மாணவர் மலர்

பட்டப்பகலில் 'மனிதனை' தேடி அலைந்த கிரேக்க ஞானி

—மகான்—

நாம் இப்பொழுது அறியும் தகவல்கள், பத்திரிகைகளில் படிக்கும் செய்திகள், வானொலி மூலம் கேட்கும் விபரங்கள் எல்லாம் நமக்குப் புதியனவாக இருக்கின்றன. இப்பொழுது வாழும் விஞ்ஞானிகள்தான் மிகவும் சிறந்த நிபுணர்கள் என்றும், உயர்ந்த அறிவாளிகள் என்றும் நினைக்கின்றோம்—எண்ணிப் பெருமை அடைகின்றோம். ஆனால் நமக்கு முன், பல ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த அறிவாளிகளை நாம் நினைக்க மறந்துவிடுகிறோம். அத்துடன் அவர்களைப் பற்றி ஓரளவு சிந்திப்பதையும் மறந்துவிடுகிறோம். இது நமது எதிர்கால வாழ்க்கைக்கு உதவாததாகும். அன்று வாழ்ந்த அறிஞர்களை ஓரளவாகுதல் தெரிந்துவைத்திருப்பது... அவர்களின் வாழ்க்கையில் இடம்பெற்ற சிறிய சம்பவங்களை நினைவில் வைத்திருக்கவேண்டியது... எதிர்காலத் தலைவர்களாகிய உங்களின் கடமையல்லவா?

⁂

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர், கிரீஸ் நாட்டின் நகரான ஏதென்ஸில் டயோஜெனீஸ் என்னும் பெயருடைய ஒரு பெரிய ஞானி வாழ்ந்துவந்தார். அவரின் அறிவொளி கிரேக்கநாட்டின் பல பகுதிகளிலும் சுடர் பரப்பியது ஒருநாள் பட்டப்பகலில்... அதுவும் நேரம் சுமார் பன்னிரண்டரை மணியிருக்கும். எரிந்துகொண்டிருக்கும் விளக்கொன்றை கையிலேந்திக்கொண்டு ஏதென்ஸ் நகரின் சந்துக்களிலும் வீதிகளிலும் நடந்துபோய்க்கொண்டிருந்தார். பட்டப்பகலில் எரியும் விளக்குடன் போய்க்கொண்டிருந்த அவரை ஒருவர் அணுகி; "ஏன் பட்டப்பகலில் விளக்குடன் போகிறீர்கள். எதைத் தேடுகிறீர்கள்?" என்று கேட்டார் அதற்கு அந்த ஞானி அளித்த பதில் இதுதான்- "நான் மனிதனைத் தேடி அலைகின்றேன்."

ஜேர்ஜ் பெர்னட் ஷாவைத் தெரியாதவர்கள் இருக்கமாட்டார்கள் என்றுதான் சொல்லலாம். அவர் யார் என்று கேட்டால் பாடசாலையில் நான்காம் வகுப்பு படிக்கும் மாணவன் கூட "ஆங்கில நாடகாசிரியர்" என்று படார் என்று பதிலளித்துவிடுவான். பெர்னட்ஷா, ஆங்கில நாடகாசிரியராகவிருந்தாலும் அவரின் பிறந்த ஊர் அயர்லாந்தாகும். இவரை ஒருவர் அணுகி; "சொந்த ஊரை விட்டு இங்கு வந்து ஆங்கில நூல்கள் எழுதும் காரணம் என்ன?" என்று கேட்டார், அயர்லாந்தை இங்கிலாந்து ஜெயித்துவிட்டது. இங்கு வந்து இங்கிலாந்தை ஜெயிப்பதைத் தவிர வேறு வழியொன்றுமில்லை. இங்கு வந்தேன். இங்கிலாந்தையும் ஜெயித்துவிட்டேன்." என்றார் பெர்னட்ஷா சற்றுப் பெருமையுடன்! அவரின் வார்த்தைகளில் பொதிந்துகிடக்கும் கருத்துக்கள்தான் எத்தன்மைவாய்ந்தது!

⁂

உலகப்பிரசித்திபெற்ற இத்தாலிய மகாகவி தாந்தே என்பவர், ஒருசமயம் வெரோனாவின் மன்னனுடைய அரசசபைக்குச் செல்ல நேரிட்டபொழுது; அந்த மன்னர் தாந்தேயிடம்— "கவிஞரே, தங்களை போன்ற அறிஞரை இந்தப் பிரபுக்கள் போற்றுவதில்லை. முட்டாள்களையே விரும்புகிறார்கள்" என்று கூறினார். இதைக் கேட்ட தாந்தே என்ன சொன்னார் தெரியுமா? "அரசே இதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை நம்மைப்போல ஒத்தவர்களையே நாம் பெரிதும் விரும்புகின்றோம் என்பது உண்மையல்லவா?" என்றார் கவிஞர் தாந்தே. அரசனுக்கு கவிஞர் விட்ட சூடு எப்படியிருந்தது பார்த்தீர்களா?

⁂

இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் கிரீஸ் நாட்டில் வாழ்ந்த உலகப் பிரசித்திபெற்ற உத்தமரான சாக்கிரட்டீஸ், மரணதண்டனை பெற்று இறுதிக் கட்டத்தில் விஷத்தை குடிக்கும் பொழுது, அவரை அவரின் ஆப்த நண்பன் ஒருவன் அணுகி, "உங்களை நாங்கள் எங்கே புதைக்கவேண்டும்?" என்று கவலை தோய்ந்த முகத்துடன் கேட்டான். "எங்கே வேண்டுமானாலும் என்னை நீங்கள் புதைக்கலாம். ஆனால் என்னைப் பிடிக்க உங்களால் ஒருபோதும் முடியாது" என்றார் சாக்கிரட்டீஸ்!

⁂

பண்டைக்காலத்தில் சைரக்கூஸ் என்னும் நகரில் நிறைவேற்றப்படும் தண்டனை பெரிதும் கவலையளிப்பதாக இருந்தது. அப்பொழுது, டிக்கோசிரியன் என்னும் கொடுங்கோல் மன்னன் அந்த நாட்டை ஆட்சி புரிந்தான். இவனுக்கு அனக்ஸார்க்கஸ் என்னும் சான்றோரைச் சிறிதும் பிடிக்காது. அவர்களைக் கொலைசெய்ய இந்த அரசன் உத்தரவிட்டான் எப்படியான உத்தரவு தெரியுமா? இந்த சந்ததியினர் கல்லுரலில் போட்டுத் துவைக்கப்பட வேண்டும் என்று அரசன் உத்தரவிட்டிருந்தான்

(அடுத்த இதழில் முடியும்)

நட்சத்திரத்தின் ஆயுட்காலம்

— தி. புருஷோத்தமன் —

ஒரு ஆண்டில் ஒளி 6,000,000,000,000 மைல் தூரம் செல்லும். இத்தூரத்திற்கு 'ஒளிவருஷம்' என்று பெயர். அதாவது ஆறு லட்சம் மைல் வானத்திலேயே ஒளிமிகுந்த 'ஸிரியஸ்' என்ற விண்மீன் இப் பூமியில் இருந்து எட்டு ஒளிவருடங்களுக்கு அப்பால் உள்ளது. நம்மிடமிருந்து கோடிக்கணக்கான ஒளி வருடங்களுக்கப்பால் சில நட்சத்திரங்கள் உள்ளன. நம்மிடமிருந்து 75 ஒளி வருடங்களுக்கப்பால் உள்ள நட்சத்திரத்தில் இருந்து பூமிக்கு ரேடியோ மூலம் செய்தி வருவதாக வைத்துக்கொண்டால் அங்கிருந்து புறப்பட்டு எழுபத்தைந்து வருடங்களுக்குப் பின்னரே பூமியை வந்தடையும்.

நட்சத்திரங்களின் ஆயுட்காலம் இரண்டாயிரம் கோடி ஆண்டுகள் என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். வானில் உள்ள குட்டிக் கோள்களில் சிறியவற்றில் ஒன்று 'ஆமார்' என்பதுதான். அதன் விட்டம் ஒருமைல்தான்.

உலகில் உள்ள மிகப்பெரிய தொலைநோக்கு 200 அங்குலம் விட்டமுள்ளது. இது அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்தின் பலோமார் மலையில் உள்ளது. 'ஹெல் டெலிஸ்கோப்பு' என்பது இதன் பெயர்.

ஹெல் டெலிஸ்கோப்பு மூலம் வானத்தை நோக்கினால் கோடிக்கணக்கான விண்மீன்களைக் காணலாம். ஆனால் 'ரேடியோ டெலிஸ்கோப்பு' மூலம் பார்த்தால் கோடானுகோடி விண்மீன்களைக்காணலாம். ரேடியோ டெலிஸ்கோப் எண்ணற்ற தூரத்திலுள்ள ரேடியோ அலைகளைக் கிரகிக்கின்றன. உலகில் உள்ள ரேடியோ டெலிஸ்கோப்புகளில் மிகப்பெரியது இங்கிலாந்தில் உள்ள 'ஜெட்ரல் பாங்கி' என்னுமிடத்தில் உள்ள டெலிஸ்கோப்பாகும்.

மூன்று

- கா. சதானந்தசர்மா -

மும்மலம்:- ஆணவம், கன்மம், மாயை.

முச்சுடர்:- சூரியன், சந்திரன், அக்கினி.

மூவுலகு: பூமி, அந்தரம், சுவர்க்கம்.

மூவிடம்:- தன்மை, முன்னிலை, படர்க்கை.

முக்குணம்:- இராசதம், சாத்விகம், தாமதம்.

முப்பொறி:- வாக்கு, மனம், காயம்.

முக்காலம்:- இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்.

மூவரசர்:- சேரவரசன், சோழவரசன், பாண்டியவரசன்.

முத்தமிழ்:- இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்.

முப்பிணி:- வாதம், பித்தம், சிலேட்டுமம்.

மும்மூர்த்திகள்:- சிவன், திருமால், பிரமன்.

பெற்றோர்-ஆசிரிய சங்க கூட்டம்

துணுக்காய், திங்கள்

யோகபுரம் முதலாம் பகுதி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டம் தலைமையாசிரியர் திரு. இ. கந்தசாமி தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இப்பாடசாலைக்கு ஒரு சங்கீத ஆசிரியையும் ஓர் விஞ்ஞான ஆசிரியரும் தேவை என்னும் தீர்மானத்தை கிளிநொச்சி எம். பி. வடபிரதேச உதவி வித்தியாதிபதி. கல்வி மந்திரி ஆகியோர்களுக்கு அனுப்பி வைப்பது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புத்தி வந்தது

— மாஸ்டர் சிவலிங்கம் —

எவ்வளவு நேரம் அப்படிக் கிடந்தானோ அது அவனுக்கே தெரியாது. மெதுவாக எழுந்தான். எங்கும் ஒரே இருள் மண்டிக்கிடந்தது. சிறிது நேரம் கன்னத்தைத் தடவியபடி குலுங்கிக் குலுங்கி அழுதான். நடந்த நிகழ்ச்சி ஒரு கணம் அவனுடைய மனத்திரையிலே நிழலோடியது. வீட்டார் எல்லோரும் தூங்கி விட்டனர் என்பதை கோபால் உணர்ந்து கொண்டான். மெதுவாக எழுந்து கால் போன போக்கிலே நடக்க ஆரம்பித்தான்.

எங்கே போகிறோம்... எந்தப் பக்கம் போகிறோம் என்ற சிந்தனை இல்லாமலே எங்கோ நடந்து கொண்டிருந்தான் அப்போது நேரம் சுமார் பனிரெண்டு இருக்கும். எங்கும் ஒரே இருள். ஊரைத்தாண்டி விட்டான். எங்கு நோக்கினும் இருள் மண்டிய பயங்கரக் காடு. அதனூடாக முற்றுந்துறந்த முனிவனைப் போல நடந்து கொண்டிருந்தவன் திடீரென்று நின்று நிதானித்தான். அது ஒரு சுடலைக்காடு என்பதை அப்போதுதான் அவனால் உணர முடிந்தது. எதிரே ஒரு சவம்... கோரமாக எரிந்து கொண்டிருந்தது......

அந்தப் பயங்கரக் காட்சியைக் கண்டதும் அவனையறியாமல் உடல் நடுங்க ஆரம்பித்து விட்டது என்ன செய்வதென்று புரியாமல் தவித்த போது... எதிர்பாராத விதமாக மழை பெய்ய ஆரம்பித்து விட்டது. அதிர்ச்சியுடன் அங்குமிங்கும் பார்த்தான். தொலைவில் ஒரு சிறிய களிமண் குடிசை அப்போது மின்னிய மின்னலில் தெரிந்தது. அலறியடித்துக் கொண்டு அந்தப் பாழ் வீட்டிற்குள்ளே ஓடிப்போய் நுழைந்தான் அப்போதும் அவனுடைய உடல் நடுங்கிக்கொண்டேயிருந்தது. அந்த இக்கட்டான அகால நேரத்தில்... அவனுடைய பாட்டி என்றோ சொன்ன பேய்க் கதைகளெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக நினைவு வர ஆரம்பித்து விட்டன. திடீரென்று எங்கிருந்தோ எழுந்த நரியின் பயங்கர ஊளைச் சத்தம் சூழ்நிலையை மேலும் மோசமாக்கியது. உடனே அலறியபடி தரையில் விழுந்து படுத்துக் கொண்டான். அப்போ... எங்கிருந்தோ பல பயங்கரச் சிரிப்பொலிகள் கிடுகிடுத்து ஒலித்தன.

(அடுத்த இதழில் முடியும்)

மல்லாவியில் ஆஸ்பத்திரி கட்டிடவேலைகள் பூர்த்தி

துணுக்காய், திங்கள்

வவனிக்குளக் குடியேற்றத் திட்டத்தில் காணி அபிவிருத்தியினரால் கட்டப்பட்டு வந்த மல்லாவி பெரியாஸ்பத்திரி கட்டிட வேலைகள் யாவும் பூர்த்தியாகி விட்டது. இவ்வாஸ்பத்திரி அடுத்த வருடம் முற்பகுதியில் ஆரம்பமாகும் என மேலதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கிராம சபைகள் விசேஷ கூட்டம்

வவனியா ஞாயிறு

வவனியா மாவட்ட கிராம சபைகளின் விசேஷ மகாநாடு ஒன்று வவனியா நகரசபை மண்டபத்தில் திரு. எஸ். யு. வல்லிபுரம் தலைமையில் நடைபெற்றது. சுகாதார அதிகாரி ஸ்தலஸ்தாபன உதவி அதிகாரி காரியாதிகாரிகள் இக்கூட்டத்திற்கு சமுகம்கொடுத்திருந்தனர்.

முடிக்குரிய காணிகள் பெறுவதற்கும் சுவீகரிக்கும் கட்டளைகளை பெறுவதில் தாமதம் ஏற்படுவதைப்பற்றியும் கலந்தாலோசிக்கவே இந்த மகாநாடு கூட்டப்பட்டது. மாவட்ட காணி அதிகாரியும் வவனியா -இணைப்பு மாவட்ட சபையின் காரியதரிசியுமான உதவி ஆணையாளர் இவைகள் பற்றி தகுந்த நடவடிக்கைகளை விரைவில் எடுப்பதாக கருத்துத் தெரிவித்தனர்.

இணுவிலில் கலைக்கதம்ப விழா

யாழ்ப்பாணம், செவ்வாய்

கந்தரோடை கலாநிலையத்தாரின் ஆதரவில் நாளைய தினம் இணுவிலில்கலைக்கதம்ப விழா நடைபெறவிருக்கிறது.

கலாநிலைய மாணவிகளின் நடனமும், கலையரசு சொர்ணலிங்கத்தின் நாடகமும், கவின் கலை வளர்ச்சி மன்றத்தினரின் நாடகமும், மற்றும் சில நிகழ்ச்சிகளும் விழாவில் இடம் பெறும்.

தமிழ்ச் சங்கம் நடத்தும் கட்டுரைப்போட்டி

நல்லூர், திங்கள்

கணேசையர் தமிழ்ச்சங்கம் தனது நான்காவது தமிழ் விழாவையொட்டி மாணவ-மாணவிகள் மத்தியில் கட்டுரைப்போட்டி ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளது. முதலிடம் பெறுபவர்களுக்கு வெள்ளிக்கிண்ணமும், இரண்டாம், மூன்றும் இடம் பெறுபவருக்கு பதக்கப்பரிசில்களும், மாவிட்டபுரத்தில் நடத்தப்படும் தமிழ் விழாவில் வழங்கப்படும்.

எந்நேரத்திலும் எப்பொழுதும் மகிழ்ச்சி ஊட்டும் பிராங்கோ சாக்கலேட்டுகளைச் சுவைக்கலாம்.

சுவிட்சர்லாந்தின் உயர்ந்த தரத்திற்கேற்ப தெரிவு செய்யப்பட்ட பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பிராங்கோ சாக்கலேட்டுக்கள் இப்பொழுது காற்றுப்புகாதவண்ணம் அடைக்கப்பட்டு புதுமையுடனும் எழிலுடனும் மிளிருகிறது.

எனவே

எல்லோரும் இலங்கையில் சிறந்த பிராங்கோ சாக்கலேட்டுக்களை விரும்புகிறார்கள் என்பதில் ஆச்சர்யம் எதுவுமில்லை

இன்றே

பிராங்கோ சாக்கலேட்டுகளை சுவைத்துப்பாருங்கள்.

இப்பொழுது மகிழ்ச்சி தரக்கூடிய பிராங்கோ சாக்கலேட்டுக்களைச் சுவையுங்கள்.

ஈ. பிரான்சிஸ் பெரரா அன் கோ.,

10-12, யரின் நுவர வீதியா,
கண்டி.
தொலைபேசி: கண்டி 5290

கொழும்பு காரியாலயம்:
284, மெசன்சர் தெரு,
கொழும்பு-12
தொலைபேசி: 7565

வானொலி நிகழ்ச்சிகள்

செவ்வாய் 8-12-64

கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 பாட்டு, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஸ்ரீலங்கா குறுக்கெழுத்துப் போட்டி, 7-00 மத்தாப்பு — "சாரு", 7-30 திசை கடந்த இசை, 7-45 உலக அரங்கு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 நேயர்விருப்பம், 9-45 காதல் வரம்.

திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்களஇசை, 6-50 வாத்தியஇசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 பாட்டு — சித்தூர் சுப்பிரமணியபிள்ளை, 7-45 ரேடியோ செய்திமலர்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 திரைப் படஇசை, 1-30 வாத்திய இசை, 1-50 குரல் இசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு, 2-40 தொடர்நிகழ்ச்சி — பொன்னொளிர்பாரதம்.

மாலை 5-15 பாட்டு — லக்ஷ்மி சுந்தரம், 5-45 இசைப்பயிற்சி.

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-15 செய்திக் குறிப்புகள், 6-20 கிராம நிகழ்ச்சிகள், 7-30 நாடகம் — "மறையாமனைவி", 7-45 பாட்டு — வெங்கடராமஐயர், 9-15 பாடல்கள் — சுப்பிரமணியபாரதியாரைப் பற்றி, 9-30 சித்திரம் — முன்னேற்றப் பாதை, 9-45 வயலின், 10-00 பாட்டு — லக்ஷ்மி சுந்தரம்.

சென்யீ

ரங்கூன், டிச. 6

ரங்கூனில் மூன்று நாள் தங்கியிருந்த சீன உதவிப் பிரதமர் மார்ஷல் சென்யீ இன்று பீக்கிங் புறப்பட்டார்.

"ஆக்கிரமிப்பு அபாயம் நீங்கவில்லை"

புதுடில்லி, டிச. 7

இந்திய முப்படைகளின் கொடித்தினம் இன்று கொண்டாடப்பட்டது. இதுசம்பந்தமாக டாக்டர் ராதாகிருஷ்ணன் விடுத்த செய்தியில் புண்ணிய பூமியை காவல் காக்கும் இந்திய வீரர்களுக்கு உதவிகள் அளிக்க மக்கள் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

ஆக்கிரமிப்பு அபாயம் இன்னும் நீங்கிவிடவில்லை என்றும் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டுமென்றும்பிரதமர் சாஸ்திரிவிடுத்த செய்தியில்குறிப்பிட்டுள்ளார்.

பம்பாயில் இதுசம்பந்தமாக பாதுகாப்பு மந்திரி சவான்விடுத்துள்ளசெய்தியில், சீன அபாயம்தீரவில்லை என்றும் பல ஆண்டுகளுக்கு இந்தியா உஷாராக இருக்கவேண்டுமென்றும் தெரிவித்துள்ளார்.

காரைநகர் இந்துக் கல்லூரி

ஜி. சி. ஈ (உயர்தர வகுப்பு) (G. C. E. adv Level Sciene and arts) இவ்வகுப்புகளில் சேர விரும்பும் மாணவர்கள், 5-1-65 முன்பாக விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

அதிபர்

ORDER NISI

In the District court of Jaffna

In the matter of the Intestate Estate of the late Eliathamby Shivapiragasam Balasubramaniam of Vannarponnai West, Jaffna
Deceased

Kamalambikai widow of E S. Balasubramaniam of Vannarponnai West Jaffna
Petitioner.

Testamentary Jurisdiction } No. 1570. T

Vs

1 Balasubramaniam Shivanandan of Vannarponnai West, and

Minor. 2. Balasubramaniam Kamalanandan ofdo. The 2nd respondent is a minor appearing by his Guardian ad-litem the 1st Respondent

Respondents

This matter coming on for disposal before N Sivagnanasundram Esquire, District Judge Jaffna on the 31st day of October 1964, in the presence of Messrs Selvarajah & Mahesan, Proctors on the part of the petitioner and the affidavit and petition of the above named petitioner having been read

It is orderd that the above named 1st respondent be appointed as Guardian-ad-litem over the minor the 2nd respondent and that the Letters of Administration to the estate of the above named deceased be issued to the petitioner as the widow of the said deceased unless the respondents or any other person or persons interested shall appear before this court on or before the 22nd day of January 1965 and show sufficient cause to the satisfaction of this court to the contrary.

The said minor to be produced in court on the said date

This 31st day of
October 1964

Sgd N Sivagnanasundram.
District Judge, Jaffna.

Drawn by,
Sgd. Selvarajah & Mahesan.
Proctors for Petitioner.

1245

Wanted

Wanted Partnership with Rs. 3000/-Security

Please Call over Personaly Between 9 A M.- 2 P M on 9th Dec. 1964. Economic Development and Agencies No 36. Bankshall St Near Food Control Supply Station. Jaffna. 1191

கோவில் மணிகளை திருடினராம்

திருக்கேதீச்சரம், திங்கள்

திருக்கேதீச்சர ஆலயத்திற்கு சொந்தமான 3 மணிகளை திருடியதாக குற்றஞ் சாட்டப்பட்டு எ[illegible]ப்பிட்டி வாசியான அமிர்தநாயகம், நாவற்குளி வாசியான அந்தோனிப்பிள்ளை ஆகிய இருவரும் மன்னார் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டனர். இருவரையும் [illegible] ஆயிரம் ரூ பிணையில் செல்ல அனுமதித்து டிசம்பர் 5-ம் திகதி [illegible] ஆஜராகும்படி நீதிபதி கட்டளையிட்டார்.

வரி விளம்பரம்

தேவை

ஒரு அநுபவமுள்ள மெஷின் அடிப்பவர் தேவை. உடனே நேரில் விண்ணப்பிக்கவும். லக்கிபிரஸ் 170/4 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 1192

கோப்பாய் மத்திய பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பண்டகசாலைக்கு ஓர் மனேஜர் தேவை. ஜி. சீ. ஈ-ல் தமிழ் கணிதம் உட்பட நாலு பாடங்களில் சித்தியடைந்தவராகவும் 1-1-65-ல் 20 வயதிற்கு உட்பட்டவராகவும் ரொக்கமாக ரூ 1000 உம், காணியாக ரூ 3000 பிணைப் பணமாக கட்டக் கூடியவருமாக இருத்தல் வேண்டும். ஐக்கிய பயிற்சி கலாசாலைப் பயிற்சிக்கு விசேஷ சலுகை உண்டு. சம்பளம் மாதமொன்றிற்கு ரூ 125. 17-12-64-க்கு முன் 'பண்டகசாலை மனேஜர்' என்று எழுதப்பட்ட தபால் உறையில் காரியதரிசிக்கு விண்ணப்பிக்கவும். 1196

தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இனாம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 1250 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 1050.

வைத்தியர் பரிபூரணநாதர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

'முற்போக்குசக்திகள் ஒன்றுபட வேண்டும்'

உடுப்பிட்டி, திங்கள்

"யாரும் எதிர்பார்க்காத நேரத்தில் அரசாங்கம் தோற்கடிக்கப் பட்டதால் மக்கள் மத்தியில் ஓர் குழப்பமான நிலைமை உருவாகியுள்ளது. இந்நிலைமையில் நாட்டை திரும்பவும் முற்போக்கான வழியில் கொண்டு செல்வதற்காக சகல முற்போக்கு சக்திகளும் ஒன்றுபட வேண்டியது அவசியமாகும்.

இவ்வாறு வட அல்வாய் கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் திரு. வீ. ஏ. கந்தசாமி தெரிவித்தார்.

"இடதுசாரி இயக்கம் பிளவுபட்டதின் மூலமாகவும் தொழிற்சங்க ஐக்கியம் சீர் குலைக்கப்பட்டதன் மூலமும் இதுவரை காலமும் நாட்டில் அடங்கிக் கிடந்த பிற்போக்கு சக்திகள் அரசாங்கத்தைத் தோற்கடிப்பதில் வெற்றி பெற்றுள்ளன. இந்த நிலைமைக்கு முக்கிய காரணம் அரசாங்கத்தின் செயல் திறமற்ற ஊசலாட்டமான போக்கும் இடதுசாரி இயக்கததில் இருந்த ஒரு சிலரின் தவறான வழிமுறைகளும் தான் காரணம்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

திருவாளர்கள் சீர்வை பொன்னையா, கே. பசுபதி தர்மதாசா ஆகியோரும் பேசினர். வட அல்வாய் வாலிபர் சங்க புதிய உத்தியோகத்தர்களாக பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டர்.

தலைவர்- திரு. எஸ். ராஜநாயகன்; உபதலைவர்- திரு. எம். சிவகுருநாதன்; செயலாளர் திரு கே. கணேசன், உபசெயலாளர் என் குலவீரசிங்கம், தனாதிகாரி திரு கே. கந்தசாமி, அமைப்பாளர் என் எவ் [illegible].

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

அவள் எழிலரசி .... அவள் பொண்ட்ஸ் பாவிக்கிறாள்

அழகினுக்கு அழகு செய்து சௌந்தர்ய தேவதையாக இலங்க உதவுவது
பொண்ட்ஸ் வனிஷிங் கிரீம்
பொண்ட்ஸ் முகப். பவுடர்.



உங்கள் பட்டு மேனியில் பொண்ட்ஸ் வனிஷிங் கிரீமைப் படர விடுங்கள் - பவுடர் பூசுமுன் தடவும் தைலமிது. செழுமை நிறைந்தது, ஆனால் கழிவற்றது. பொண்ட்ஸ் வனிஷிங் கிரீமை உங்கள் சருமம் உவப்புடன் ஏற்கிறது. சருமவடுக்களை மறைத்து, உங்கள் எழில் வதனத்திற்கு மெல்லினிய அழகொளி ஊட்டுகிறது. பவுடரை மணிக்கணக்கில் இது அழியாமல் சமமாக வைத்திருக்கிறது.

பின்பு, உங்கள் சருமத்திற்கு அழகு மெருகூட்ட தோகை போன்ற மிருதுவான பொண்ட்ஸ் முகப் பவுடரைப் பூசுங்கள். பல வர்ணங்களில் இது வருகிறது. பரிபூரணமாகக் கலக்கிறது. திரளாமல் படருகிறது. நாள் முழுமையும் புத்துணர்ச்சி அளித்து சமமாக இருக்கிறது

அதன் பின் நீங்கள் அழகினுக்கு
அழகு செய்யப்பட்ட சௌந்தர்ய தேவதையாக இலங்குவீர்கள்!

JWT-P-28

சிறந்த பஸ் கண்டக்டருக்கு தங்கப் பதக்கம் பரிசு!

யாழ்ப்பாணம், செவ்

அண்மையில் நடைபெற்ற யாழ்ப்பாணம் கிழக்கு இ. போ. ச. டிப்போ கவுன்சில் கூட்டத்தில், பொதுமக்களுடன் அன்போடும் ஆதரவோடும் பழகும் பஸ் கண்டக்டருக்கு 'தங்கப் பதக்கம்' வழங்குவதென முடிவு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட தென்மராட்சி கிழக்கு பஸ் பிரயாணிகள் சங்கத் தலைவர் திரு. சி. எம். எஸ். காதன் திறமை வாய்ந்த பஸ் கண்டக்டருக்கு தங்கப்பதக்கம் வழங்க, இச்சங்கம் முன்வந்துள்ளதாகத் தெரிவித்தார். திறமைவாய்ந்த கண்டக்டரை தெரிவு செய்ய ஒரு குழு நியமிக்கப்படவேண்டும் என்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கிழக்கு டிப்போவில் கடமையாற்றும் பஸ் கண்டக்டர்களில் திறமை வாய்ந்த கண்டக்டரை 1965-ம் ஆண்டு தைமாதம் 1-ம் தேதி முதல் 31-ம் தேதிவரை இக்குழு தெரிவு செய்யும்.

இக்குழுவினால் தினமும் பஸ் கண்டக்டர் எல்லோரும் அவதானிக்கப்பட்டு, பரிசுக்குரியவர் தெரிந்தெடுக்கப்படுவர்' என அறியப்படுகிறது.

மந்திரிக்கு மகஜர்

உடுப்பிட்டி, திங்.

நவம்பர் 18-ம் திகதி வர்த்தமானியில் குறிப்பிட்டபடி சங்கீத நடன ஆசிரியர்களுக்கே நியமனம் வழங்கப்பட்டுள்ளதென்றும், ஓவிய ஆசிரியர்களுக்கும் உடனடியாக இச்சலுகையை வழங்கும்படியும் கல்வி மந்திரிக்கு அகில இலங்கை ஓவிய ஆசிரியர் சங்கத் தலைவர் திரு சி. தங்கராசா மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

'டிறிபேர்க் வெற்றி'

சாவகச்சேரி, திங்கள்

அரியாலை விளையாட்டுக் கழகத்திற்கும் சாவகச்சேரி டிறிபேர்க் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் டிறிபேர்க் கழகம் ஒருகோலால் வெற்றி பெற்றது. அரியாலைக் கோஷ்டி கோல் ஏதும் போடவில்லை. டிறிபேர்க் கோஷ்டியைச் சேர்ந்த தாஸ, ராஜதுரை இருவரும் பாராட்டத்தக்க விதத்தில் விளையாடினர்.

ராஜா சினிமா (சுழிபுரம்)
இப்பொழுது
திரையிடப்படுகிறது
சிவாஜி, சாவித்திரி, ஜெமினி
முதலியோர் நடித்த
கப்பலோட்டிய
தமிழன்

REGAL — JAFFNA
NOW SHOWING
Audie Murphy-Dan Durey a
in
6 BLACK HORSES
(Eastman Color)

ஸ்ரீ மனோகரா
(யாழ்ப்பாணம்) போன்: 485
Cranes are Flying
4-45 p. m. 7 p. m. and
9-45 p. m.

2-வது மகத்தான வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜயா (மட்டக்களப்பு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜிதா (அட்டன்)
தீந்தமிழால் இறைவனைப் பாடி, தெவிட்டாத
பக்தியை மூட்டி,
தெய்வத்தின்
நிலை அடைந்து
தமிழர் உள்ளத்தில்
வாழும் - பட்டினத்தார்
பிரபல
பின்னணி பாடகர்
டி. எம்.
சௌந்தரராஜன்
எம். ஆர். ராதா
ஜெமினி சந்திரா
எஸ். ராமராவ்
எஸ். டி. சுப்புலக்ஷ்மி
எஸ். ஆர். ஜானகி
நடித்த
பட்டினத்தார்
சங்கீதம்: ஜி. ராமநாதன் — டைரக்ஷன்: கே. சோமு

மன்னார் பட்டினசபை தேர்தல் முடிவுகள்

மன்னார், திங்கள்

மன்னார் பட்டினசபை தேர்தல் முடிவுகள் வருமாறு:

1-ம் வட்டாரம்: திரு. எஸ். அரசரட்ணம் லேச்.
2-ம் வட்டாரம்: திரு. யூ அப்துல் சலாம்.
3-ம் வட்டாரம் திரு. எம். எஸ். அப்துல் றகீம்.
4-ம் வட்டாரம்: திரு கே. மாணிக்கராசா
5-ம் வட்டாரம்: திரு. வி போல்
6-ம் வட்டாரம்: திரு ஏ. கபிரியேற்பிள்ளை.
7-ம் வட்டாரம்: திரு. ஏ. முத்துராசா.

டபிள்டெக்கருக்கும் "தொற்றுநோய்"

யாழ்ப்பாணம், செவ்

புதிதாக யாழ்ப்பாணத்தில் சேவைக்கு விடப்பட்ட "டபிள் டெக்கர்" பஸ்ஸிற்கும் இடைவழியில பிரயாணிகளுடன் திடீரென பழுதடைந்து நிற்கும் தொற்றுநோய் பரவத் தொடங்கிவிட்டது.

கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி 100 பிரயாணிகளை வரை ஏற்றிச் சென்ற டபிள் டெக்கர் நேற்றுக்காலை நாவற்குழியில் நின்றுவிட்டது. இதனால் பரீட்சை எழுதச் சென்ற மாணவர்களும் ஆஸ்பத்திரிக்குச் சென்ற நோயாளிகளும் அதிகம் பாதிக்கப்பட்டனர்.

அதன் பின் அதேவழியில் பிரயாணிகளுடன் வந்த சாதாரண பஸ்ஸில் டபிள்டெக்கர் பிரயாணிகள் அடுக்கடுக்காக ஏற்றப்பட்டு யாழ்ப்பாணம் வந்தடைந்தனர்.

வாகனங்கள் அரசாங்க உடமையாகும்!

கொழும்பு, புதன்

எதிர்வரும் கலகெதர உபதேர்தலில் வாக்காளர்களை வாக்களிப்பு நிலையங்களுக்கு ஏற்றிச்செல்லும் கார்களைக் கைப்பற்றுமாறு பொலிசாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இலங்கை பாராளுமன்ற தேர்தல் சட்டத்தில் 1964-ம் ஆண்டு செய்யப்பட்ட 10-வது திருத்தத்தின்பிரகாரம் இப்புதிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர்களை ஏற்றிச்செல்லும் வாகனங்கள் சொந்தக்காரர்மீது வழக்குத் தாக்கல் செய்யவும், அவர்கள் குற்றவாளிகளாக காணப்பட்டால் அந்த வாகனங்களை அரசாங்க உடமையாக்கவும் புதிய திருத்தம் வகைசெய்கிறது.

தாய் கண்டித்ததால் மகன் தற்கொலை

ஊர்காவற்றுறை, திங்கள்

புங்குடுதீவு ஐந்தாம் வட்டாரத்தைச் சேர்ந்த விசுவலிங்கம் துரைலிங்கம் (வயது 19) தற்கொலை செய்து மரணமானார்.

ஸ்தலத்தில் நடைபெற்ற மரணவிசாரணையின் போது மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

தாயின் கண்டிப்பால் மனமுடைந்த இவ் வாலிபன் தற்கொலை செய்துகொண்டான் என மரண விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை, திங்கள்

அனலைதீவு தெற்கு சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர் திரு. செ. பாலசுப்பிரமணிய ஐயர், தலைவர் திரு. அ. தயாபரராசா, உபதலைவர் திரு. ப. குணரத்தினம், செயலாளர் திரு. ஆ. தியாகராசா, உப-செயலாளர் திரு. வ. பொன்னம்பலம், தனாதிகாரி திரு த. நடராசா.

நிர்வாகசபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

ஒரே தடவையில் 5 வருட போனஸ்!

'றிற் ஆபீஸர்' யூனியன் முயற்சி வெற்றி

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள 'றிற்' ஆபீசர்களுக்கு கடந்த 5 வருடங்களாக வழங்கப்படாமலிருந்த 'போனஸ்' ஒன்றாக சேர்த்து வழங்கப்படவிருக்கிறது.

யாழ்ப்பாண மாவட்ட றிற் ஆபீசர் யூனியன் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக தைப்பொங்கலுக்கு முன் எல்லோருக்கும் போனஸ் வழங்க உப-பிஸ்கால் திரு ஆறுமுகம் வாக்குறுதியளித்திருப்பதாக அறியப்படுகிறது.

கடந்த ஐந்து வருட 'போனஸை' சேர்த்து ஒரே முறையில் கொடுக்கத் தீர்மானித்திருப்பதாகவும், இதற்கான விபரங்கள் முழுவதும் பிஸ்கால் காரியதரிசிக்கு இம் மாதம் 15-ம் திகதிக்குள் அனுப்பி வைக்கும் 'றிற்' ஆபீஸர்கள் மட்டும் இப் போனஸை பெறுவார்களென்றும் தெரிய வருகிறது.

நிதி மந்திரி காரியாலயத்தில் சிபார்சு பெறுவதற்காக சகல விபரங்களும் இம்மாதம் 16-ம் தேதி அனுப்பப்படும் எனவும் தெரியவருகிறது.

முன்னாள் அதிபர் விஜயம்

யாழ்ப்பாணம், திங்கள்

முன்னாள் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி பிள்ளை தற்பொழுது இராமநாதன் கல்லூரியில் தங்கியிருக்கிறார். இம்மாதம் 9-ம் தேதிவரை இங்கு தங்கியிருக்கும் இவர் 10-ம் தேதி கதிர்காமத்திற்கு செல்கின்றார்.

மீண்டும் 14-ம் தேதி இவ்விடம் வந்து இம்மாதம் 23-ம் திகதிவரை இராமநாதன் கல்லூரியில் தங்கியிருப்பார்.

கீரிமலையில் பெண்கள் ஏமாற்றம்

காங்கேசன்துறை, திங்.

கீரிமலையில் பெண்கள் ஸ்நானம்செய்யும் கேணி சில தினங்களாக மூடப்பட்டிருப்பதால் தூரத்திலிருந்து வரும் பெண்கள் பலர் ஏமாற்றத்துடன் திரும்புவதாக அறிவிக்கப்படுகிறது.

பத்திரிகைகளை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றேன். அரசாங்கத்திற்கு எதிராக வாக்களித்த ஒவ்வொரு அங்கத்தவர்களுக்கும் ஏரிக்கரை ஸ்தாபனம் 50,000 ரூபா கொடுத்துள்ளதாகவும் அறிகிறேன். ஒரு அங்கத்தவர் எனக்கு, அரசாங்கத்தை எதிர்த்து வாக்களிக்கும்படி கூறி 50 ஆயிரம் ரூபா தர முன்வந்தார். இதுபற்றிய செய்திகள் எல்லாவற்றையும் சேகரித்தபின் தான் அப் பணத்தை வாங்க மறுத்ததோடு அரசாங்கத்திற்கெதிராகவும் வாக்களிக்க மறுத்துவிட்டேன். நான் சேகரித்த செய்திகளை பாராளுமன்றத்தில் வெளியிடுவதற்கு தயாராகவிருக்கிறேன்.

சி. பி. டி. சில்வாபோன்ற அரசியல்துரோகிகளும், தமது கட்சியில் இருக்கிறார்கள் என்பது கடைசிநேரம்வரை பிரதம மந்திரிக்குத் தெரியாததையிட்டு நான் மிகவும் வருந்துகிறேன்.

திரு. கே. எம். பி. ராஜரத்தினவைத் தலைவராகக்கொண்ட ஜாதிக விமுக்தி பெரமுனைக்கு அரசாங்கத்திற்கு எதிராக வாக்களிப்பதற்காக, ஏரிக்கரை ஸ்தாபனம் ஐந்து லட்சம் ரூபா கொடுத்துள்ளது.

பதுளையிலுள்ள லங்கா சமசமாஜக்கட்சி காரியாலயத்திலிருந்து திரு. பண்டார ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார்.

புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், செவ்.

பிரிட்டிஷ்கவுன்சிலின் ஆதரவில் இம்மாதம் 10-ந் தேதி தொடக்கம் 12-ந் தேதிவரையும் யாழ்ப்பாணம் பொதுசன நூல்நிலையத்தில் ஷேக்ஸ்பியரின் எழுத்தோவியங்களும், ஷேக்ஸ்பியரைப் பற்றி மற்றும் அறிஞர்கள் எழுதிய நூல்களும் கண்காட்சிக்கு வைக்கப்படும். இம்மூன்று நாட்களிலும் தினமும் காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரையும் பொதுமக்கள் புத்தகக் கண்காட்சியைப் பார்வையிடலாம்.

'ஆரோக்கியம் சிறுவர்களுக்கு அவசியம்'

நல்லூர், செவ்வாய்

"சிறுவர்களின் நல்வாழ்விலே தான் எதிர்காலம் தங்கியுள்ளது. சிறுவர்கள் நோய் முதலியவற்றிலிருந்து பாதுகாக்கப் படவேண்டும்" என்று காங்கேசன் துறைப் பட்டினசபைத் தலைவர் திரு. மு. திடவீரசிங்கம் சிறுவர் வைத்திய நிலையமொன்றை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

வீமன்காமம் ஆங்கில பாடசாலை ஆரோக்கிய சபையின் ஆதரவில் மயிலப்பை வெங்காயச் சங்கக் கட்டிடத்தில் சிறுவர் வைத்திய நிலையம் அங்குரார்ப்பணம்செய்துவைக்கப்பட்டது.

திரு திடவீரசிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது

இளம் பிள்ளைகளை அடிக்கடி வைத்திய பரிசோதனை செய்து அவர்களை நோயில்லாதவர்களாக வாழச்செய்யவேண்டும். நல்ல சந்தர்ப்பங்கள் கிடைக்கும்போது அதனைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். நாட்டுக்கும், நமக்கும் நல்வாழ்வு ஏற்படும்வகையில் நமது வாழ்க்கை அமைய வேண்டும்.

வைத்திய அதிகாரி திரு. ஜே. வி. துரைசிங்கம் சிறுபிள்ளைகளுக்கு வைத்திய சிகிச்சை அளித்து நிலையப் பணியை ஆரம்பித்துவைத்தார்.

காங்கேசன்துறை, திங்கள்

கே. கே. எஸ். அபிவிருத்தி விளையாட்டுக் கழகத்தின் சார்பாக உடுவில் ஸ்டார் கோஷ்டிக்கும் கரவெட்டி கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி இடையில் நிறுத்தப்பட்டது என்றும் மத்தியஸ்தர் பாரபட்சமாக நடந்துகொண்டதாகக் கருதப்பட்டதால் இவ்வாறு இடையில் நிறுத்தப்பட்டதென்றும் அறிவிக்கப்பட்டது.

மரண அறிவித்தல்

வைரமுத்து சின்னத்தம்பி

திரு. எஸ். இராஜதுரை (ஆசிரியர், வைத்தீஸ்வர வித்தியாலயம்), திருமதி மணி கந்தையா, காலஞ்சென்றவர்களான அப்புகதுரை, பொன்னுத்துரை ஆகியோரின் அருமைத் தந்தையும், மீனம்மாவின் அருமைக் கணவருமாகிய வைரமுத்து சின்னத்தம்பி அவர்கள் சிவபதமடைந்துவிட்டார்கள். அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 4 மணிக்கு பருத்தித்துறை வீதியிலுள்ள 60-ம் இலக்க இல்லத்திலிருந்து கில்லூன்றி மயானத்திற்கு ஈமக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

1194

இப் பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 8-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.